

### தாமான் தாசேக் தித்திவங்சாவில்

# மின்சார ஸ்கூட்டரை வாடகைக்கு விடுவது ஏன்?

### ஒரு வியாபாரியின் விளக்கம்

கோலாலம்பூர், பிப். 18-

தாமான் தாசேக் தித்திவங்சாவில் சைக்கிள்களை வாடகைக்கு விடும் வியாபாரிகள் இப்போது மின்சார ஸ்கூட்டர்களை வாடகைக்கு விடுகின்றனர். நடவடிக்கைச் செலவினத்தைச் சமாளிக்க இவ்வாறு செய்கிறோம் என்று 40 வயதுடைய ஒரு வியாபாரி கூறினார்.

தாமான் தாசேக் தித்திவங்சாவுக்கு வருவோரிடம் மின்சார ஸ்கூட்டர் தேவை அதிகரித்திருக்கிறது என்றும் அவர் சொன்னார்.

இந்தப் பகுதியில் மின்சார ஸ்கூட்டரை வாடகைக்கு விட முடியாது என்பது எங்களுக்குத் தெரியும். ஆனால் சைக்கிளைவிட மின்சார ஸ்கூட்டரைத்தான் வாடிக்கையாளர்கள் அதிகம் விரும்புகின்றனர்.

ஒரு மணி நேரத்திற்கு 10 ரிங்கிட்டிற்கு சைக்கிளை வாடகைக்கு விடும்போது செலவுகளைச் சமாளிக்க முடியவில்லை. ஆனால் மின்சார ஸ்கூட்டரை 40 நிமிடத்திறகு 24 ரிங்கிட் கட்டணத்தில் வாடகைக்கு விட முடிகிறது என்று அவர் சொன்னார்.

தாமான் தாசேக் தித்திவங்சாவில் கோலாலம்பூர் மாநகர் மன்ற அமலாக்கத்துறை மேற்கொண்ட சிறப்பு நடவடிக்கையின்போது அவர் இவ்வாறு சொன்னார்.

இந்தச் சுற்றுலாப் பகுதியில் சைக்கிள்களை வாடகைக்கு விடும் வியாபாரிகள் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர் என்றும் அவர் சொன்னார்.

சைக்கிள்களை வாடகைக்குவிடும் 45 வியாபாரிகள் இங்கு உள்ளனர். ஆகவே வாடிக்கை யாளர்களைப் பெறுவதில் கடுமையான போட்டித் தன்மை ஏற்படுகிறது.

ஆகவே மின்சார ஸ்கூட்டரை வாடகைக்கு விட்டால் கொஞ்சம் வருமானம் கிடைக்கும் என்றும் அவர் சொன்னார். நான் சைக்கிளை மட்டும் வாடகைக்கு விட்டால் மாதம் 2,500 ரிங்கிட் முதல் 3,000 ரிங்கிட் வரை வருமானம் கிடைக்கிறது. எனது தொழிலாளியின் சம்பளம் உள்ளிட்ட மற்றச் செலவுகளுக்கும் பழுதடையும் சைக்கிள்களைச் சரிசெய்யவும் இந்தத் தொகை போதுமானதாக இல்லை என்று அவர் சொன்னார்.

நேற்றுக் காலை 9.30 மணிக்கு அமலாக்கத்துறை மேற்கொண்ட நடவடிக்கையில் கைவிடப்பட்டுக் கிடந்த சுமார் 100 சைக்கிள்களும் 30 மின்சார ஸ்கூட்டர்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் வியாபார லைசென்ஸ் நிபந்தனைகள்படி தாமான் தாசேக் தித்திவங்சாவில் ரிக்ஷா, மின்சார சைக்கிள், மின்சார ஸ்கூட்டர், உருளைகள் கொண்ட காலணி, சறுக்குப்பலகை, ஸ்கூட்டர், இயந்திர வாகனம் போன்றவற்றைப் பயன்படுத்த முடியாது.